
# முருகன் அடியார்கள் மகாதேஜோமண்டலத்தார் - ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்



அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் இருவினைச் சமமெய்தி, களங்கம் இல்லாதவராய், சிவசாமியத்தை அடைந்தவராய், முத்தான்மாவாய், முற்பிறவியிலேயே சிவசமநிலை அடைந்து உலகம் உய்ய வேண்டி ஞான தசையிலே மீனாக்கதியாகிய சிவஞான சாயுச்சியம் பெற்றவர். இத்துணை ஞானம் பெற்ற இவர், தாம் இந்நிலவுலகில் அவதரித்த நாள் முதல், துறவறம் பூண்ட 1895 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த இல்லமே இன்று **"ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் நினைவாலயமாக, ஸ்ரீகுமர பரமேஸ்வரன் அருள் இல்லம்"** எனத் திகழ்கிறது. சுவாமிகள் முருகனின் மீது 6666 பாடல்கள் இயற்றியுள்ளார். இவை அனைத்தும் மகா மந்திரங்கள் ஆகும். இக்கட்டுரையில் சுவாமிகள் முருகனின் அடியார்கள் அனைவரும் மகாதேஜோ மண்டலத்தார்கள் என்று அழைக்க வேண்டும் என்று ஆணித்தரமாக விளக்குவதை இப்போது பார்ப்போம்.

**சுவாமிகளின் அடிப்படைக் கொள்கைகளில் சில:**

1. பரம்பொருள் எனப்படுபவர் பிரமன், விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்னும் பஞ்ச கிருத்திய மூர்த்தங்களின் மேம்பட்ட மூர்த்தமாகிய ஸ்ரீபரமேஸ்வரன் ஆவர். ஆனால் சிறந்த அறிவாளிகள்கூட இக்காலத்தில் ருத்ர மூர்த்திக்கும் சிவபரம்பொருளுக்கும் உள்ள வேறுபாடு உணராமல் சிவபெருமானை அழிக்கும் கடவுள் என்று வாய் கூசாமல் கூறியும் கைகூசாமல் எழுதியும் வருகின்றனர். அது மாபெரும் பாபச் செயலாகும்.

**பஞ்சகிருத்தியங்களும் அவற்றின் கர்த்தாக்களும்:**

1. ஆக்கல் – ஸ்ரீபிரமன் 2. காத்தல் – ஸ்ரீவிஷ்ணு 3.அழித்தல் – ஸ்ரீருத்ரன் 4. மறைத்தல் – ஸ்ரீமஹேஸ்வரன் 5. அருளல் – ஸ்ரீசதாசிவன்.



ஸ்ரீபரமேஸ்வரனின் திருவருள் துணைகொண்டு அவரது ஆணைப்படி இவ்வைந்து மூர்த்திகளும் தத்தம் தொழில்களைச் செவ்வனே செய்கின்றனர். இவர்கள் சர்வ சங்கார காலத்தே ஸ்ரீபரமேஸ்வரனிடத்தே ஒடுங்குவர்.

2. அறுமுகப் பெருமான், முருகன், குமரன், குமாரபரமேஸ்வரன், சேய்ப்பரமன், சுப்பிரமணியன் எனப் பல பெயர்களால் போற்றப்படும் அறுமுகச் சிவனும் இந்தப் பரமேஸ்வரனே ஆவர். இவ்விரண்டு மூர்த்தங்களும் வெவ்வேறு மூர்த்தங்கள் என்பது உபசார வழக்கே.

**"ஆறுமுகப் படுமுனநீ யைந்துமுகத்**
**துடனிலவி யழியா நூல்கள்**
**கூறுமுறைப் படியதன்பின் குறைவில்சிவ**
**சக்தியொடுங் குறைவொன் றின்றி**
**ஈறுமுத லொருவிடநின் றுருக்காட்ட**
**னாதியுன்னை யீசன் சேயென்**
**றூறில்லா துரைத்திடுத லுபசார**
**மல்லால்வே றொழுங்குண் டோவே.**
**ஐந்துவகைப் படுபூத வியல்பினைக் கொண்**
**டளவிலுல காக்கி வாங்க**
**ஐந்துமுகத் துடன்விளங்கி யைந்தெழுத்தி**
**னுருவாகி யவற்றோ டுள்ள**
**பந்தமொன்று சால்குடிலை யருவமுக**
**மென்பதையும் பரித்தே மஞ்ஞை**
**யுந்துமறு முகனான வாறெழுத்துக்**
**கிறையேயென் னுறுவ ரீராய்"**


சிவத்தமிழ் குகமணி
தெ. தனபால்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526


என்று சுவாமிகள் திருத்தொடையலில் அழகாக இக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். தம் எல்லா நூல்களிலும் வேதம் ஆகமம் மற்றும் சைவ சித்தாந்த சாஸ்திர நூல்கள் பலவற்றின் துணைகொண்டு இந்த உண்மையினைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இந்த திருத்தொடையல் பதிகத்தைப் பற்றிய முக்கிய செய்திகளை அடியேன் தீபாவளி மலரில் கொடுத்துள்ளேன் என்பதை அடியார்கள் நினைவில் கொள்ள வேண்டுகிறேன்.

3. ஸ்ரீகுமார பரமேஸ்வரனை, அறுமுகச் சிவனை, சுப்பிரமணிய மூர்த்தியை, முருகப் பெருமானை ''ஐம்முகச் சிவமாம் ஸ்ரீபரமேஸ்வரனுக்குச் சமானமாக மாட்டார்,

## விருதுகள்!

- ✶ இந்தியாவில் குடிமக்களுக்கு வழங்கப்படும் உயர்ந்த விருது – பாரத ரத்னா.
- ✶ 'ஆசியாவின் நோபல் பரிசு' என்று அழைக்கப்படுவது – ரேமன் மகசேசே விருது.
- ✶ பத்திரிகைத் துறைக்காக அமெரிக்காவில் வழங்கப்படும் விருது – புலிட்சர்.
- ✶ பத்திரிகைத் துறைக்காக இந்தியாவில் வழங்கப்படும் முக்கியமான விருது – பி.டி. கோயங்கா விருது

அவர் பரிவார தேவதையே" என்று எவர் கூறினாலும், எழுதினாலும் அன்னார் ஐம்முகச் சிவத்தின் மீது எவ்வளவு பத்திமை பூண்டிருந்தாலும், அவருக்குக் கிடைக்குங்கதி எரிவாய் நரகேயாகும். அதுபோலவே ஸ்ரீகுமார பரமேஸ்வரன் மீது எத்துணை பத்திமை பூண்டிருப்பினும் ஐம்முகச் சிவபெருமானை எந்த விதத்திலேனும் தாழ்த்திப் பேசினாலும் தவறே. ஆதலின், இவ்விரு மூர்த்தங்களும் ஒன்றே என்றும் யாதொரு பொருளையும், நீளம், அகலம், கனம் எனச் சொல் மாத்திரையால் பிரித்தல் கூடுமேயன்றி பொருள் மாத்திரையால் பிரித்தல் கூடுவதன்று என்பது போலவும் நெருப்பு, சூடு, ஒளி ஆகிய மூன்றும் எஞ்ஞான்றும்பிரிக்கப்படாதது போலவும் சிவம், சக்தி, சேய் ஆசிய சச்சிதானந்தப் பரம்பொருளும் வேறுபடுத்திப் பேசக்கூடாத முழுப்பொருளே ஆகும். அப்படிப் பேசிடின் படுநரகமே வாய்க்கும் என்றும் சாதித்துள்ளார்கள்.

"சிவஞ்சக்திக் கன்னியமாச் சேயை யுரைப்போர்
பவம்பற்றிப் பாசறைகொள் வார்."

என்னும் பாடல் இக்கருத்தை நன்கு தெளிவுபடுத்தும்.

4. அறுமுகச் சிவமாம் முருகப் பெருமானை வழிபடும் சமயம் சைவ சமயமே என்றும் மற்றும் கௌமார சமயம் என்றும் அங்ஙனம் வழிபடுவோர் அனைவரும் வைதிக சைவர்களே என்றும் தெளிவுபடுத்தியுள்ளார்கள், குமாரசிவமே பெரிது என்பது கௌமார சமயத்தினர் கொள்கை. இதனை சுவாமிகள் கண்டிக்கிறார். இது இறைவனின் திருவிளையாடலேயாகும்.

5. திருஞானசம்பந்தப் பெருந்தகை போன்று ஐம்முகச் சிவத்தை வழிபடுவோர் பஞ்சாக்கரத்தையும், அருணகிரிநாதப் பெருந்தகை போன்று அறுமுகச் சிவனை வழிபடுவோர் சடக்கரத்தையும் உபாசிக்கவேண்டும் என்றும், இரு பக்குவர்களுக்கும் உறும் கதியில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் விளக்கியுள்ளார்கள். மேலும் வழிபடுமூர்த்தம் குமார மூர்த்தியாயிருப்பின் ஒல்லையில் இப்பிறயிவிலேயே ஈறிலாக் கதி எய்தலாம் என்று முத்திரையிட்டுள்ளார்கள்.

6. ஒரு தாயின் வயிற்றில் பிறந்த எவரும் பரம்பொருள் ஆகார். ஆக முடியாது. எக்காலத்தும் விழிப்பு நிலையிலிருப்பதே பரம்பொருள் இலக்கணம். இவ்வுலகத்தில் வாழ்ந்தவர்கள், வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் உயிர் உபாதைக்கு இலக்கானவர்கள் ஆதலால் யாருக்கும் இந்தப் பெருமை பெற வாய்ப்பில்லை. ஆதலின் அவர்கள் பரம்பொருள் ஆகமாட்டார்கள். இந்தவாறு நாம் ஒழுகி வந்தோமானால் அறுமுகப் பரமனின் திருவருள் பூரணமாகக கிட்டும் என்பது உறுதி.

ஸ்காந்த மஹாபுராணம் யுத்த காண்டத்து 23 ஆம் அதித்யாயத்தில் ஸ்ரீகுமாரப் பெருமான் தன்னுடைய பரமேச்சுர வடிவினைக் காட்டியருளியபோது அவ்வொளியினைத் தரிசித்த தேவர்களது விழிகள் (கணப்போது) பார்வையின்றி மாழ்கின! சுரர்களாகிய பிரமவிட்டுணுகள் முதலிய தேவநிரேட்டரனைவருங் கந்தபிரானின் அளவிலா தேஜோமண்டல்த்தில் ஆயிரத்தில் ஓரமிசமளவே யறிந்தனரென்றும், ஆயிரத்தில் ஒரு கூறே தரிசிக்குமாறு நின்றருளிய அளவிலா தேஜோ மண்டல இறைவனையே ஆசாரத்தோடும் அன்போடும் வழிபடும் அடியாரனைவரும், எத்தேசத்தாராய், எக்குலத்தாராயிரப்பினும் அவர் ''மகா தேஜோ மண்டலத்தார் ஆவராகலின் யாமவரை இப்பெயர் தரித்து நிற்குங் கடமைக்குட்படுத்தியுள்ளோம்" என்றும் ஸ்ரீமத் சுவாமிகள் வரைந்துள்ளார்கள்.

மகாதேஜோமண்டலத்தாருக்கு அடியில் கண்டவாறு இலக்கணம் வகுத்துள்ளார்கள்.

வகைப்படா திருக்கும் வைவேல்
வலியதா யிலங்கு மாறு
பகைப்படா வைத்து மொன்றும்
பகுபடா தொருங்கு கூடித்
தகைச்சடா னனனாய் நிற்றல்
சரதபூ ரணனென் றோர்வார்
தொகைப்படா மாதே சோமண்
டலத்தராய்ச் சுடரு நீரார்.

அவனரு ளொன்றே வேட்டெவ்
வரந்தைவந் துறினு நிற்போர்
எவனுறு பதியிற் றோன்றி
யெங்கிருந் திடினுஞ் சாதி
எவனென வினவு வார்முன்
யாதுரைத் திடினு மன்னோர்
சுவனமின் மாதே சோமண்
டலத்தராய்க் களிப்பார் மன்னோ.

நீண்டவிப் பேறி யாண்டு
நிகரறு மின்பே யாகக்
காண்டலி னிறுமாப் பென்று
கழறலா மிதனை யேற்பார்

**யாண்டுநின் றிடினு மெம்மான்**
**யாணரே பாராட்டிநின் றேதந்**
**தாண்டிடு மாதே சோமண்**
**டலத்தராந் தகைமை யோரே.**

அன்பர்கள் அனைவரும் ஸ்ரீமத் சுவாமிகளின் குகநெறியைப் பற்றி, ஸ்ரீகுமார பரமேஸ்வரன் அருள் ஒன்றையே வேண்டி, மஹாதேஜோ மண்டலத்தாராகத் திகழ வேண்டும் என்று குருவருளையும், திருவருளையும் இறைஞ்சி நிற்கின்றோம். ஞானியர் எவரும் பூர்வாசிரமத்தில் தாங்கள் வாழ்ந்து வந்த ஊரின் பெயரைத் தங்கள் பெயர் முன் வைத்துக் கொண்டதில்லை. ஆனால் நமது சுவாமிகள் சுமார் தாம் 45 ஆண்டுகள் வாழ்ந்து வந்த அந்த ஊரின் பெயரை முன் வைத்து 'பாம்பன் சுவாமிகள்' என்றும் 'பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்' என்றும் தங்களைக் குறிப்பிடுவதை மனமார அனுமதித்தார்கள். ஆதலின் இப்பாம்பன்பதி எத்துணை பெருமை வாய்ந்தது என்பதை வருங்கால சந்ததி நன்கு உணரும்.

வேத, ஆகம, உபநிடத, இதிகாச, புராண தத்துவக் கடலின் கரைகண்டு சிவகுக அபேதம் தாபித்து சாத்திரங்களாலும் அறுமுகப் பரமனை அடைதலே பரமுத்தி என்று விளக்கியருளிய பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் இவற்றை சாதிக்க கூடமாக இருந்தது பாம்பன் பகுதியில் உள்ள இந்த இல்லமே ஆகும். ஞானபானு வதிந்த இல்லம் ஞான ஆலயம் என்பதே சால்புடைத்து. இந்த இல்லத்தின் அருமை பெருமைகளை குருவருளாலும், திருவருளாலும் ஒருவாறு உணர்ந்த ஒத்த கருத்தைடைய அன்பர்கள் பலரின் முயற்சியால் இந்த இல்லம் ஞான ஆலயமாகப் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

முருகன் அடியார்கள் மகாதேஜோமண்டலத்தார் அனைவரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் வாழ்ந்த



இல்லத்தை ஒரு நாள் சென்று கண்டிப்பாகப் பார்க்க வேண்டும். இப்போது உடனே நீங்கள் பார்க்க வேண்டுமென்றால் அடியேனால் உருவாக்கப்பட்ட இணையதளமான www.pambanswamigai.org or www.pambanswamigal.net ல் சுவாமிகளின் புகைப்படத் தொகுப்பு என்ற தலைப்பில் சென்று பார்த்தால் நலமாக இருக்கும்.

இப்பிறவியிலேயே பரமுத்தியடைய விரும்புவோரெல்லாம் இந்த ஞான ஆலயத்தையும் அதன் பெருமையையும் அறிந்து, உணர்ந்து, தரிசித்து ஆன்மலாபம் எய்தி இன்புறுவார்களாக!.



# ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

**சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :**

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**